பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 06 2025 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு முழுமையான அறிவாற்றல் பயன்பாடு அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

2. புதுச்சேரி சட்டப்பேரவையை முற்றிலும் டிஜிட்டல்மயமாக்கும் திட்டத்தை மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் இன்று தொடங்கி வைக்கிறார்.

3. எல்லைப் பகுதிகளில் பணியாற்றும் ராணுவ வீரர்கள் விழிப்புடனும், தயார் நிலையிலும் இருக்குமாறு ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர திவிவேதி கேட்டுக்கொண்டுள்ளார்.

4. ஆஃப்கனிஸ்தான், ஈரான் உள்ளிட்ட 12 நாடுகளைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவுக்குள் நுழைய விதிக்கப்பட்ட தடை, இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது.

5. பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஸ்பெயினின் கார்லோஸ் அல்காரஸ் சாம்பியன் பட்டம் வென்றார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு முழுமையான அறிவாற்றல் பயன்பாடு அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

நாக்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வேகமாக மாறிவரும் உலகில் அறிவாற்றல் முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார்.

புதுமைக் கண்டுபிடிப்புகள், தொழில்முனைவு, அறிவியல், தொழில்நுட்பம், ஆராய்ச்சி, திறன் மேம்பாடு போன்றவற்றை வெற்றிகரமாக செயல்படுத்துவது எதிர்கால வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும் என்றும் திரு. கட்கரி தெரிவித்தார்.

<<<<>>>>

புதுச்சேரி சட்டப்பேரவையை முற்றிலும் டிஜிட்டல்மயமாக்கும் திட்டத்தை தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் இன்று தொடங்கி வைக்கிறார்.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறையின் **NeVA** திட்டத்தின் ஒரு பகுதியாக புதுச்சேரி சட்டப்பேரவையின் செயல்பாடுகள் காகிதமில்லா நடைமுறைக்கு மாறவுள்ளது.

இதன்மூலம் சட்டப்பேரவையின் செயல்பாடுகளை வெளிப்படையாகவும், எளிதில் அணுகக்கூடியதாகவும், திறம்பட செயல்படக்கூடிய வகையிலும் மாற்றுவதற்கு வழிவகை ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நடைமுறை மூலம் முழுமையான டிஜிட்டல் செயல்பாட்டை மேற்கொள்ளும் 19வது சட்டப்பேரவையாக புதுச்சேரி சட்டப்பேரவை திகழும்.

<<<<>>>>

எல்லைப் பகுதிகளில் விழிப்புடனும், தயார் நிலையிலும் பணியாற்றுமாறு ராணுவ வீரர்களை ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர திவிவேதி கேட்டுக்கொண்டுள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் கார்வால் எல்லைப் பகுதியில் ராணுவத்தின் ஆயத்த நிலை குறித்து ஆய்வு செய்த அவர், அப்பகுதியில் பணியாற்றும் ராணுவ வீரர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது அர்ப்பணிப்பு உணர்வு மற்றும் நேர்த்தியுடன் பணியாற்றி வரும் வீரர்களுக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

இந்த பயணத்தின்போது ஜோதிர்மத் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள **Ibex Tarana** பண்பலையின் சமுதாய வானொலி சேவையையும் ஜெனரல் உபேந்திர திவிவேதி தொடங்கி வைத்தார்.

இந்த வானொலியில் கல்வி, சுற்றுச்சூழல், வானிலை, பேரிடர் ஆயத்தநிலை, வேலைவாய்ப்பு, சுற்றுலா, சுகாதாரம், பொழுதுபோக்கு மற்றும் பாரம்பரிய கலை தொடர்பான நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.

<<<<>>>>

பாதுகாப்பு தளவாடம் சார்ந்த 9 தொழில்நுட்பங்களை , பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திற்கு உட்பட்ட வாகன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம், நாட்டில் உள்ள 10 தொழில் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது.

மகராராஷ்டிர மாநிலம் அகமது நகரில் இயங்கி வரும் இந்த மையம், ரசாயனம், உயிரியல், கதிரியக்கம், அணுசக்தி மறுஆய்வு வாகனம், கவச துப்பாக்கி, தீவிரவாத எதிர்ப்பு வாகனம், வஜ்ரா-கலவர தடுப்பு வாகனம் ஆகியவற்றை தயாரிப்பதற்கான தொழில்நுட்பம், பொதுத்துறை நிறுவனங்களான பாரத் எலக்ட்ரானிக்ஸ், பாரத் எர்த் மூவர்ஸ் மற்றும் டாடா நிறுவனம் உள்ளிட்ட தனியார் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தங்களை வழங்கிப் பேசிய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் திரு. சமீர் காமத், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது உள்நாட்டு தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்ட போர் தளவாடங்கள் முக்கியப் பங்கு வகித்ததாக கூறினார்.

எனவே இவற்றின் உற்பத்தியை அதிகரிக்க தொழில் நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்றும் திரு. சமீர் காமத் கேட்டுக்கொண்டார்.

<<<>>>>

சுகாதாரத் துறையில் டிஜிட்டல் மாற்றத்தை ஏற்படுத்துவதில் பீஹார் மாநிலம் நாட்டின் முன்னணி மாநிலமாக உருவெடுத்துள்ளது.

ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தை செயல்படுத்துவதன் மூலம் இம்மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகள் ஆன்லைன் முறையில் பதிவு செய்வது 92 சதவிதமாக அதிகரித்துள்ளது.

இம்மாநிலத்தில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கு **QR-Code** முறை அதிக அளவில் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்னாவில் உள்ள அதிநவீன கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் இந்த டிஜிட்டல் மாற்றத்தில் பெரும் பங்கு வகிப்பதாகவும் அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<>>>>

அமெரிக்காவின் நாசா மற்றும் ஸ்பேஸ்-எக்ஸ் விண்வெளி நிறுவனம் இணைந்து மேற்கொள்ளும் விண்வெளிப் பயணம் நாளை தொடங்குகிறது.

இந்தியாவின் சுபான்ஷு சுக்லா மற்றும் அமெரிக்கா, போலந்து, ஹங்கேரி நாடுகளைச் சேர்ந்த 4 வீரர்கள் இந்த விண்வெளிப் பயணத்தை மேற்கொள்ள உள்ளனர்.

இவர்கள் 14 நாட்கள் சர்வதேச விண்வெளி மையத்தில் தங்கியிருந்து புவி சுற்றுவட்டப் பாதை தொடர்பான ஆய்வை மேற்கொள்ள உள்ளனர்.

இந்த விண்வெளிப் பயணம் மூலம் ராகேஷ் ஷர்மாவிற்குப் பிறகு விண்வெளி ஆய்வு மையத்திற்கு செல்லும் இரண்டாவது இந்தியர் என்ற பெருமையை சுபான்ஷு சுக்லா பெறுகிறார்.

<<<<>>>>

ஆஃப்கனிஸ்தான், ஈரான் உள்ளிட்ட 12 நாடுகளைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதித்து அந்நாட்டு அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் பிறப்பித்த உத்தரவு இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது.

இதன்படி மியான்மர், காங்கோ, கினியா, எரித்ரியா, ஹெய்தி, சூடான், லிபியா, ஏமன் நாடுகளைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவிற்கு இனி வர முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கியூபா, வெனிசுலா, துர்க்மெனிஸ்தான் உள்ளிட்ட வேறு 7 நாடுகளைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவுக்குள் நுழையவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாத தொடர்பு, விசா காலம் முடிந்த பிறகும் தங்கியிருப்பது போன்ற காரணங்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

<<<<>>>>

குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் சட்டவிரோதமாக பணியில் ஈடுபடுத்தப்பட்ட 16 குழந்தைத் தொழிலாளர் உள்ளிட்ட 21 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

மேற்குவங்கத்தைச் சேர்ந்த இந்த தொழிலாளர்கள் மாதம் 8 ஆயிரம் ரூபாய் சம்பளத்திற்கு பணியமர்த்தப்பட்டு தினம்தோறும் 10 மணி நேரத்திற்கும் அதிகமாக பணிபுரிவதுடன், பல்வேறு கொடுமைகளுக்கும் ஆளானதாக எழுந்த புகாரையடுத்து, காவல்துறையினர் இவர்களை மீட்டுள்ளனர்.

இவர்களை சட்டவிரோதமாக பணியமர்த்திய நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

<<<>>>>

சீனா - இந்தியா இடையிலான நட்புறவு வரும் காலத்தில் மிகச்சிறப்பனதாக அமையும் என்று இந்தியாவுக்கான சீன தூதர் **Xu Feihong** தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். இந்தியாவும் - சீனாவும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமைவாய்ந்த நாகரிகத்தை கொண்டதாக திகழ்வதாக கூறினார்.

பழங்காலத்தில் இரு நாடுகளும் மிக நெருங்கிய நட்புறவுடன் திகழ்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

எல்லைப்பிரச்சினை பற்றிய கேள்விக்கு பதிலளித்த அவர், இரு நாடுகளும், கலாச்சாரம் மற்றும் வரலாற்று ரீதியான நெருங்கிய பரிமாற்றங்களைக் கொண்ட நாடுகளாக உள்ளன என்று தெரிவித்தார்.

எனவே இருதரப்பு உறவை மேம்படுத்த இருநாட்டு அரசுகள் மட்டுமின்றி அனைத்து தரப்பினரும் முயற்சி மேற்கொள்ள வேண்டும் எனவும் சீன தூதர் கேட்டுக்கொண்டார்.

<<<>>>>

கோவையில் தொண்டு நிறுவனங்கள் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ராணுவத்தின் மெட்ராஸ் ரெஜிமெண்டல் படைப்பிரிவு தளபதி லெப்டினென்ட் ஜெனரல் மன்ஜிந்தர் சிங் கலந்துகொண்டு 500 மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கைக் கால்களை வழங்கினார்.

தமிழகம் மற்றும் கேரளாவைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு இந்த செயற்கைக் கால்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் பேசிய திரு. மன்ஜிந்தர் சிங், மருத்துவத்துறை மற்றும் பஞ்சாயத்து அமைப்புகள் இணைந்து பயனாளிகளைத் தேர்வு செய்திருப்பது பாராட்டுக்குரியது என்றார்.

இதுபோன்ற பயனாளிகளைக் கண்டறிய அனைத்து இடங்களிலும் மருத்துவ முகாம்களை நடத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

உலகளாவிய உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுக்கும் என மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

கர்நாடக மாநிலம் தார்வாடில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்தியில் பிஜேபி ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது நிலவிய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு உலகின் மூன்றாவது பெரிய உற்பத்தியாளராக உருவெடுக்கும் நிலையை நோக்கி நாடு சென்றுகொண்டிருப்பதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் உறுதியான தலைமையின்கீழ் பல்வேறு துறைகளிலும் இந்தியா வளர்ச்சி பெற்றிருப்பதுடன், சுயசார்பு அடைந்து வருவதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஸ்பெயினின் கார்லோஸ் அல்காரஸ் சாம்பியன் பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 4-6, 6-7, 6-4, 7-6, 7-6 என்ற செட் கணக்கில் இத்தாலியின் **Janik Sinner**-ஐ வென்றார்.

------------

தைவான் ஓபன் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா 16 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

சீன தைபேயில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா 12 தங்கம், 3 வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றது.

--------------

இந்தியா ஏ - இங்கிலாந்து லயன்ஸ் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது இன்னிங்சில் இந்தியா ஏ அணி 184 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

இப்போட்டியின் மூன்றாம் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் இந்தியா ஏ அணி இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 163 ரன் எடுத்துள்ளது.

முதல் இன்னிங்சில் இந்தியா ஏ அணி 348 ரன் எடுத்திருந்தது.

இங்கிலாந்து லயன்ஸ் அணி முதல் இன்னிங்சில் 327 ரன் எடுத்திருந்தது.

**<<<<The End>>>>**